ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பொருமாநீள் படை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பொருமாநீள் படை ॥

ஈச்வரன் காரணம் இன்றிச் செய்யும் உபகாரம்

‡பொரு மா நீள் படை⋆ ஆழி சங்கத்தொடு⋆
திரு மா நீள் கழல்⋆ ஏழ் உலகும் தொழ⋆
ஒரு மாணிக்⋆ குறள் ஆகி நிமிர்ந்த⋆ அக்-
கரு மாணிக்கம்⋆ என் கண்ணுளதாகுமே (1)

கண்ணுள்ளே நிற்கும்⋆ காதன்மையால் தொழில்⋆
எண்ணிலும் வரும்⋆ என் இனி வேண்டுவம்⋆
மண்ணும் நீரும்⋆ எரியும் நல் வாயுவும்⋆
விண்ணுமாய் விரியும்⋆ எம் பிரானையே (2)

எம் பிரானை⋆ எந்தை தந்தை தந்தைக்கும்
தம் பிரானை⋆ தண் தாமரைக் கண்ணனை⋆
கொம்பராவு⋆ நுண் நேர் இடை மார்வனை⋆
எம் பிரானைத் தொழாய்⋆ மட நெஞ்சமே (3)

நெஞ்சமே நல்லை நல்லை⋆ உன்னைப் பெற்றால்
என் செய்யோம்⋆ இனி என்ன குறைவினம்⋆
மைந்தனை⋆ மலராள் மணவாளனைத்⋆
துஞ்சும்போதும்⋆ விடாது தொடர் கண்டாய் (4)

கண்டாயே நெஞ்சே⋆ கருமங்கள் வாய்க்கின்று⋆ ஓர்
எண் தானும் இன்றியே⋆ வந்தியலுமாறு⋆
உண்டானை⋆ உலகேழும் ஓர் மூவடி
கொண்டானை⋆ கண்டு கொண்டனை நீயுமே (5)

நீயும் நானும்⋆ இந்நேர் நிற்கில்⋆ மேல் மற்றோர்
நோயும் சார்கொடான்⋆ நெஞ்சமே சொன்னேன்⋆
தாயும் தந்தையுமாய்⋆ இவ்வுலகினில்⋆
வாயும் ஈசன்⋆ மணிவண்ணன் எந்தையே (6)

www.prapatti.com

எந்தையே என்றும்⋆ எம் பெருமான் என்றும்⋆
சிந்தையுள் வைப்பன்⋆ சொல்லுவன் பாவியேன்⋆
எந்தை எம் பெருமான்⋆ என்று வானவர்⋆
சிந்தையுள் வைத்துச்⋆ சொல்லும் செல்வனையே (7)

செல்வ நாரணன் என்ற⋆ சொல் கேட்டலும்⋆
மல்கும் கண் பனி⋆ நாடுவன் மாயமே⋆
அல்லும் நன் பகலும்⋆ இடை வீடின்றி
நல்கி⋆ என்னை விடான்⋆ நம்பி நம்பியே (8)

‡நம்பியைத்⋆ தென் குறுங்குடி நின்ற⋆ அச்-
செம்பொனே திகழும்⋆ திரு மூர்த்தியை⋆
உம்பர் வானவர்⋆ ஆதியஞ்சோதியை⋆
எம் பிரானை⋆ என் சொல்லி மறப்பனோ (9)

மறப்பும் ஞானமும்⋆ நான் ஒன்றுணர்ந்திலன்⋆
மறக்கும் என்று⋆ செந்தாமரைக் கண்ணொடு⋆
மறப்பற என் உள்ளே⋆ மன்னினான் தன்னை⋆
மறப்பனோ இனி⋆ யான் என் மணியையே (10)

‡மணியை வானவர் கண்ணனைத்⋆ தன்னதோர்
அணியை⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
பணி செய் ஆயிரத்துள்⋆ இவை பத்துடன்⋆
தணிவிலர் கற்பரேல்⋆ கல்வி வாயுமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com